நாள். 18.03.2024

O.S. No. 91/2011

நீ.ம.சா.1

திரு. S.முல்லைவேந்தன், நீதிமன்ற ஆணையர், பென்னாகரம்.

த/பெ. சுந்தரம்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. இடை மனு எண். 177/2019 ன் படி நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு ஆணையர் ஊதியமாக ரூ. 4000/– வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 20.06.2019 ம் தேதியிட்ட உத்தரவில் 27.08.2009, 13.07.2010 ம் தேதியிட்ட அசல் கிரய ஆவணங்களை 04.07.2019 ம் தேதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகை, பதிவு ஆவணங்களில் உள்ள கைரேகையுடன் சேர்த்து ஒப்படைக்கவேண்டும் என்றும், இல்லாத பட்சத்தில் வாதி அடையாளச்சான்றிதழுடன் ஆணையர் கூறும் தேதியில் ஆஜராகி ரேகை பதிந்து கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி இ.ம எண். 177/2019 ல் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிருரை, உத்தரவு ஆகியவற்றை படித்து பார்த்து தான் நான் செயல்பட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 14.06.2019 ம் தேதியிட்ட எதிருரையில் நிலஅபகரிப்பு போலிசாரிடம் புகார் கொடுத்த சமயத்தில் நியாபகமறதியில் அசல் ஆவணங்களை ஒப்படைத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த எதிரிருரை சுருக்கம் தான் என்னிடம் காட்டப்படும் 20.06.2019 ம் தேதியிட்ட உத்தரவிலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எதிருரையில் சொல்லப்பட்ட கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளாத நிலையில் மனுவானது அனுமதிக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதாவது நிலஅபகரிப்பு போலிசாரிடம் அசல் ஆவணங்கள் கொடுத்ததாக கூறியுள்ள விபரங்களை நீதிமன்றம் ஏற்காத நிலையில் தான் நீதிமன்ற ஆணையரிடம் அசல் ஆவணங்களை ஒப்படைக்குமாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 20.06.2019 ம் தேதியிட்ட உத்தரவின்படி தான் நீதிமன்ற ஆணையர் பணியை நான் செய்துள்ளேன் என்றால் சரிதான். கைரேகை நிபுணரிடம் ஆவணங்களை ஒப்படைத்து பின்னிட்டு

அறிக்கை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். கைரேகை நிபுணரின் கருத்துரை பற்றி எனக்கு தெரியாது.

4. வாதி/ எதிர்மனுதாரரை நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுவதற்கு முன்பாக எனக்கு தெரியாது. கைரேகை பெற்ற சமயத்தில் தான் முதன் முதலாக பார்த்தேன். அதேபோல் எதிர்மனுதாரர்/வாதி அழைத்து வந்த சாட்சிகளையும் அப்போது தான் பார்த்தேன் அதற்கு முன்பாக பார்க்கவில்லை. பொதுவில் வந்த இரு நபர்களிடம் தான் நான் சாட்சி கையொப்பம் பெற்றேன். எதிர்மனுதாரர்/வாதியை எனக்கு தெரியாது என்பதால் ஆதார் அடையாள அட்டையை பெற்று சரிபார்த்தற்கு பின்னிட்டு தான் அவரிடம் கைரேகை பெற்றேன் என்று சாட்சி கூறுகிறார். மனுதாரர்/ பிரதிவாதியை பொறுத்தவரை கைரேகை பெற்ற சமயத்தில் அவர் வரவில்லை. மனுதாரர்/பிரதிவாதிக்கு நேரடியாக கூறியும், அவரது தரப்பு வழக்கறிஞருக்கு பதிவு தபால் மூலம் அறிவிப்பு கொடுத்தும் அவர்கள் யாரும் முன்னிலையாகவில்லை.

5. கிராம நிர்வாக அலுவலர், உத்தாரி, கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளர் ஆகிய பொது இடத்தில் வைத்து தான் எதிர்மனுதாரர்/வாதியிடம் கைரேகை பெறவேண்டும் என்று 20.06.2019 ம் தேதியிட்ட உத்தரவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்/ வாதியை நீதிமன்றத்தில் ஆஜராகி கைரேகை இடவேண்டும் என்று அறிவிப்பு கொடுத்தேன். ஆனால் எதிர்மனுதாரர்/வாதி படுத்த படுக்கையாக இருப்பதாக நீ.ம.சா.ஆ.8ன் படியான மெமோ தாக்கல் செய்யப்பட்டு வாதியின் வீட்டிற்கு சென்று கைரேகை பெறவேண்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் நான் உத்தரவுப்படி நடந்தேன்.

6. வாதியின் வீட்டிற்கு சென்றதற்கு பின்னிட்டு 1 ம் பிரதிவாதியை நேரடியாக அழைத்தும் அவர் ஆஜராகவில்லை. அதனை தான் 06.03.2020 ம் தேதியிட்ட எனது மெமோவில் குறிப்பிட்டுள்ளேன்(Ex C7). மேற்படி மெமோ தொடர்பாக இரு தரப்பிற்கும் மெமோவின் நகலை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அரகாசனஅள்ளி மற்றும் பள்ளிமுத்தானூர் ஆகிய இரண்டு ஊர்களும் வெவ்வேறானவை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தின் மூலம் ஆணையராக நியமிக்கப்பட்ட நிலையில் வேறு நபரிடம் வாதியின் கையொப்பத்தை பெற்று அதில் 2 சாட்சிகளை காட்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். நான் ஆணையராக

நியமிக்கப்படுவதற்கு முன்பு அரகாசனஅள்ளி மற்றும் பள்ளிமுத்தானூர் ஆகிய ஊர்களுக்கு செல்லவில்லை என்றால் சரிதான். வாதி எனது உறவினரோ, நண்பரோ அல்ல என்றால் சரிதான். வாதியின் பிள்ளைகளும் யார் என்பது எனக்கு தெரியாது. அவர் எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்பது தெரியாது என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் இதற்கு முன்பு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நான் நீதிமன்ற உத்தரவின் பேரில் எனது பணியை நேர்மையாகவும், சரியான முறையிலும் மேற்கொண்டுள்ளேன் என்று சாட்சி கூறுகிறார்.

7. நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டதற்கு பின்னிட்டு வாதி மற்றும் பிரதிவாதிகள் என இருதரப்பினரையும் வரவழைத்து பேசியபோது ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகை அடங்கிய ஆவணங்கள் தங்கள் வசம் இல்லை என்று கூறினார்கள். நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் அசல் ஆவணங்களானது ஒப்படைக்கப்பட்டதாக பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்ட நிலையில் அதற்கு இணையான ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகை அடங்கிய ஆவணத்தை ஆஜர் படுத்த ஒத்துழைக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நிலஅபகரிப்பு பிரிவில் பிரதிவாதி அசல் ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ள நிலையில் அதன் நகலை பெற்று தருவதாக என்னிடம் எந்த விளக்கமும் தரவில்லை என்றால் சரிதான்.

8. என்னிடம் காட்டப்படும் மாதிரி கையொப்பங்களானது இ.ம. எண். 177/2019 மனு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யப்ப்டட கைரேகை என்றால் சரிதான். மேற்படி கைரேகை எதுவும் நிபுணருக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் வீட்டிற்கு சென்று கைரேகை பெற்ற சமயத்திலோ அல்லது அதற்கு பின்னிட்டோ பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேனை எதுவும் தெரிவித்தார்களா என்றால் இல்லை. அதேபோல் 06.03.2020 ம் தேதியில் நான் மெமோவுடன் சேர்த்து ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் பிரச்சனைக்குரிய கைரேகை அடங்கிய ஆவணங்களுடன் சேர்த்து தாக்கல் செய்த நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் தற்போதைய  இ.ம.எண். 08/2023 மனுவானது 01.07.2023 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுவானது நான் கைரேகை பெற்றதற்கு பின்னிட்டு 3 வருடங்கள் கழித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  நான் முறைப்படி நீதிமன்ற உத்தரவிபடி நீதிமன்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**